**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**முன்னிலை – திரு. இரா. இளஞ்செழியன், பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ம் நாள் செவ்வாய்கிழமை**
**<u>அசல் வழக்கு எண். 13/2022</u>**
**<u>(CNR.No.TNSA21-000029-2022)</u>**

P. ஸ்ரீசந்திரசேகரன் த/பெ, பொன்னுசாமி (26)
ப.க.எண்.18/12A, பு.க.எண்.3/256 வாழவந்தி கிராமம் மற்றும் அஞ்சல்,
ஏற்காடு தாலுக்கா, சேலம் மாவட்டம். ...வாதி

/ எதிர் /

1. சின்ன அண்ணாமலை த/பெ, பெறுஞ்சிகவுண்டர் (70)
2. C. குப்புசாமி த/பெ, சின்ன அண்ணாமலை த/பெ, C.குப்புசாமி (40)

(1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளின் முகவரி
க.எண்.3/257, வாழவந்தி கிராமம், ஏற்காடு தாலுக்கா,
சேலம் மாவட்டம்)

3. R. மணியம்மாள் க/பெ, ராஜகோபால்,
த/பெ, சின்ன அண்ணாமலை (61)
க.எண்.53, தீப்பரவரி ரோடு, சில்கன் வேலர்டு பின்புறம்,
ஏற்காடு தாலுக்கா, சேலம் மாவட்டம்.

4. சந்தரா த/பெ, சின்ன அண்ணாமலை (56)

க.எண்.3/171, ஈஸ்வரி கார்டன், குப்பனூர்,

சேலம் தாலுக்கா, சேலம் மாவட்டம். ...பிரதிவாதகள்

| | | |
|---|---|---|
| Date of Suit: 08.04.2014 | Value of the Suit | :Rs.2500/- |
| | Court Fee paid | :Rs.200/- |
| | Excess | : Rs.22/- |

Cause of Action:14.03.2013, 1st Week of May 2013 at Vazhavanthi Village, Post Yercaud, Salem District.

தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம், தனித்துவ சுவாதீனம் வேண்டியும் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இஇவ்வழக்கானது மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலத்தில் கடந்த 15.04.2014–ம் தேதியன்று அசல் வழக்கு எண்.328/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு கடந்த 13.03.2022–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 29.06.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மெய்கண்ட மூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சௌந்தர்பாட்ஷா, அவர்களும், ஆஜராகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி சான்றாவாணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்:–

**<u>தீர்ப்பாணை</u>**

| | |
|---|---|
| i) | வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள தாவாவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது; |
| ii) | தாவா B அட்டவணை சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், தாவா B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை இரண்டு மாதத்திற்குள் காலி செய்து தாவா சொத்தினை வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும்; |
| iii) | தவறும்பட்சத்தில் இந்நீதிமன்ற நடவடிக்கையில் அகற்றப்படும் என்று செயலுறுத்துக்கட்டளை வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

**<u>வழக்குசொத்து விவரம்</u>**

**<u>"A" SCHEDULE OF THE PROPERTY</u>**

பட்டா எண்.71–க்குட்பட்ட சர்வே எண்.18/12–க்கு வி.ஹெ.0.17.5 தீரூ. 0.55 பை இதற்கு ஏக்கர்படி 0.43 1/4 சென்ட் நிலம் பூராவும் இதற்கு சக்குபந்தி விபரம்

கிழக்கில் – சர்வே எண்.18/3–ல் உள்ள க.கந்தசாமி நிலம்

மேற்கில் – சர்வே எண்.18/8–ல் உள்ள பெ.பெரியஅண்ணமாலைகவுண்டர் நிலமும்,

சர்வே எண்.18/9–ல் கண்டுள்ள வெ.சின்னஅண்ணாமலை நிலமும்,

வடக்கு – சர்வே எண்.18/10–ல் உள்ள அ. கோவிந்தசாமி நிலமும்,

– சர்வே எண்.18/11–ல் உள்ள பெ. சின்ன அண்ணாமலை நிலமும்,

– சர்வே எண்.18/19–ல் உள்ள ஆ.பெரிஞ்சிகவுண்டன் நிலமும்,

தெற்கில் – சர்வே எண்.18/13–ல் கண்டுள்ள பெ. சின்ன அண்ணாமலை நிலமும்,

– சர்வே எண்.13/12–ல் உள்ள கோ.லட்சுமி நிலமும்,

ஆக இதன் மத்தியில் உள்ள வி.ஏக்கர் 0.43 1/4 சென்ட் (அ) வி.ஹெ.0.17.5. விவசாய நிலமும், இதே சர்வே எண்ணில் சுமார் 30 வருடங்களுக்கு முன் கல் மண் சுவர் வைத்து மங்களூர் ஓடு போட்டு கட்டப்பட்டுள்ள பண்ணை வீடு 1–ம் இதில் உள்ள மின்சார இணைப்பும் S.C.No.206 சேர்ந்தும்.

**"B" SCHEDULE OF THE PROPERTY**

மேற்படி "A" சொத்து விபரத்தில் உள்ள நிலத்தில் பிரதிவாதி 5 சென்ட் இடத்தை தாவா வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி ஆக்கிரமனம் செய்து கட்டிடம் கட்டியுள்ளனர். இதற்கு சக்குபந்தி கிழக்கின் சர்வே எண்.18/3, மேற்கில் & வடக்கில் "A" சொத்தின் மீதி மற்றும் தெற்கில் சர்வே எண்.18/13 மற்றும் 13/12 ஆகும்.

இத்தீர்ப்பாணையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/–.இரா.இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீத்துறை நடுவர்**
**ஏற்காடு.**